அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு 2024

# தமிழ் - ஆண்டு 7

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

திருகோணமலை தமிழீழத்தின் நடுப்பகுதியாக அமைந்துள்ளது. இது தமிழர் தாயகத்தின் வடக்கு, கிழக்குப் பகுதிகளை இணைத்து நிற்கும் பெருநகராகும். உலகின் மிகச்சிறந்த இயற்கைத் துறைமுகங்களுள் ஒன்றாகத் திருகோணமலைத் துறைமுகம் விளங்குகிறது. இங்கே உள்ள திருக்கோணேசர் ஆலயம் பிரசித்தி பெற்ற தலமாகும். திருகோணமலையின் வடக்கே போர்த்துக்கேயரால் கட்டப்பட்ட கோட்டை அமைந்துள்ளது. திருகோணமலையின் வடமேற்கில் அமைந்துள்ள நிலாவெளிக் கடற்கரை சுற்றுலாத் தளமாக விளங்குகிறது. வரலாற்றுக் காலத்திலிருந்து தமிழரின் வாழ்விடமாகத் திருகோணமலை இருந்து வருகிறது. முதன்முதலாக திருகோணமலையில்தான் மறைமுகமாகச் சிங்களக் குடியேற்றங்கள் குடியேற்றப்பட்டன. திருகோணமலை வளங்கள் நிறைந்த தமிழரின் தாய்நிலமாகும்.